

வண்ணம் அமையப்போகும் இவ்வளாகத்தின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு.

1. 216 அடியில் இராமானுசரின் ஐம்பொன் திருவுருவச்சிலை.
2. 108 திவ்யதேசங்களை ஸமதாஸித்தாந்த்திற்கு அடித்தளமாகவும் கலங்கரைவிளக்கம் போன்றும் அமைத்தருளியமையை நினைவுகூறும் வகையில் இராமானுசரின் சிலைக்கு நாற்புரத்திலும் வட்டவடிவத்தில் 108 திவ்யதேச எம்பெருமான்களின் கோயில்கள் அமையப்பெறுதல்.
3. ஸமத்துவஸித்தாந்தத்தை விளக்கிடும் நோக்குடன் இராமானுசரின் வாழ்க்கை வரலாற்றுப்பாதையின் முக்கிய அம்சங்களின் இயந்திரமனித இயக்கிக்கண்காட்சி (Robotic Exhibits).
4. பற்பல்லாயிரமாண்டுகள் வனப்புடன் விளங்க உறுதியான கற்கட்டமைப்புக்களுடன் கூடிய வளாகம்.
5. நம் நாட்டின் பல பயணியர் ஈர்ப்புமையங்களில் ஒன்றாக அமையக் கூடிய ஸாத்தியக்கூறு.
6. இராமானுசரையும் அவர் மதத்தையும் அறிந்துகொள்ள உலகமக்களுக்கு வாய்ப்பளிக்கப்போகும் மையமாக அமைதல்.
7. இராமானுசஸித்தாந்த்தை பரப்ப ஓர் ஆராய்ச்சி மையமாகவும் புத்தகவெளியீட்டுக்கழமாகவும் செயல்படும் திறன்.

உங்கள் கைங்கர்யத்துக்கு 80ஜி கிடைக்கும்

Deductible u/s 80G (vi) of the I.T.Act 1961
URN: AAKAS2597K/07/14-15/S-0118: 80G
Dated:10-02-2015

### இத்திருப்பணியின் தோராயமதிப்பீடு

இவ்வளவு விசேஷாம்சங்களுடன் கூடிய இவ்வளாகம் சிறப்பாக அமைய சுமார் 600 கோடியிலிருந்து 800 கோடிவரை ஆகலாம் என்று JIVA என்ற இதன் திட்டக்குழுவால் கணிக்கப்பட்டுள்ளது.

### இதுவும் அவனதின்னருளே

நமக்கும் நம் வாழ்நாளில் கிடைக்கப்பெற்ற தருணத்தை ஸாதகமாக்கிக்கொண்டு சீரியசிந்தனையுடன் எல்லோரும் அந்வயிக்க வேண்டும், யாம் ஸந்நியாஸியாக இருப்பினும் ஸம்ப்ரதாயக்ருத்யமென்றும், சிறுதுளி பெருவெள்ளம் என்றகணக்கில் எல்லோரும் வைணவர்தாம் என்ற உண்மையையறிந்து உதவமுன்வறின் முடியாததென் என்ற தைரியத்திலும்தான் இதை நிறைவேற்ற முன்வந்துள்ளோம்.



### கடமையைநிறைவேற்றுவோம் வாரீர்

அவரவரியன்ற ஸேவையைச்செய்தும்செய்வித்தும் இப்பணியைத் -தலைக்கட்டுவது நம் அனைவருடயகடமை என்பதை மனதில் கொள்ளவேண்டும். வாரீர் ஒன்றுபடுவோம். கடமையை நிறைவேற்றுவோம்.

| AXIS BANK, Samshabad. | |
|---|---|
| Acct Num: | 914010046595367 |
| IFSC Code: | UTIB0000867 |

OR

| ANDHRA BANK, Muchintal Branch | |
|---|---|
| Acct Num: | 209710100000007 |
| IFSC Code: | ANDB0002097 |

ஜய ஸ்ரீமந்நாராயண



# ஸ்ரீமத்ராமானுஜஸஹஸ்ராப்தி மஹோத்ஸவம்

## ஆயிரமாவது ஆண்டு விழா

பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய
ஸ்ரீஸ்ரீஸ்ரீ த்ரிதண்டி சின்ன ஸ்ரீமந்நாராயண
ராமானுஜ ஜீயர்ஸ்வாமிகளுடைய
மங்களாசாஸநத்துடன்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

## ஸ்ரீமத்ராமாநுசரின் மஹிமை

யதிகட்கிறைவன், காரேய் கருணை இராமாநுச, திக்குற்றகீர்த்தி இராமாநுசன், இராமாநுசன் சரணேகதி வேறெனக்கே, யாறேயறிபவர் நின்னருளின்தன்மை என்றெல்லாம் உலகமலிபுகழ் இராமாநுசன் குணாதிசயங்களை வைணவ வையம் போற்றி உய்வுபெறுகிறது.

## ஸ்ரீமத்ராமாநுசரின் ஆசார்யோசித ஸாதனைகள்

ஆதிசேஷனின் அவதாரமாய் இளையபெருமாளின் மறு அவதாரமாய் பகவத்கைங்கர்யமே ப்ரதானமென்றபடி பகவத்சரணாரவிந்தமன்றி மற்றைய விஷயங்களில் பற்றறவராக ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தை வேத, உபநிஷத், ஸ்ம்ருதி, இதிஹாஸ, புராணங்களின் ப்ரமாணங்களுடன் உலகெலாம் பரப்பி, அனைத்து ஜீவராசிகளும் வைணவாம்சர்களே எனறும் அனைவரும் ஆசார்யக்ருபைபெற்று வீடுபேறுபெறும் பெரும்பாக்கியம் பெற்றவர்களே என்றும் பகவதம்சமான எல்லோரும் ஒருவருக்கு ஒருவர் ஸமமானவர்களே என்றும் இறைவனின் க்ருபைக்கு அனைவரும் பாத்திரமானவர்களே என்று ஸித்தாந்தம் செய்து இந்த உயர்ந்த நெறியைத்திறம்படத்தெளிவுறச்செய்து அனைத்து உலகமக்களையும் தம்பால் ஈர்த்து, நம்மிராமாநுன் என்று வேறுபாடின்றி எல்லோரும் போற்றும் வண்ணம் தற்போதைய பகுத்தறிவு சிந்தனைகள் ஏற்படாத காலத்திலேயே அதாவது 1000 ஆண்டுகளுக்கு முன்பு ஸமதா ஸித்தாந்தத்திற்கு வித்திட்டது மற்றுமின்றி தன் வாழ்நாளிலேயே அதைத்தழைத்திடவும் செய்தபெருமை இராமாநுசரையே சேரும்.

## ஸ்ரீமத்ராமாநுசரின் மதம் அனைத்துவைணவமதங்களின் அடித்தளம்

இன்று இப்பூவுலகில் திகழும் எண்ணற்றவைணவ ஸித்தாந்தங்களுக்கும் ஸ்ரீமத்ராமானுசரின் வைஷ்ணவக்கோட்பாடுகள் தான் அடித்தளம். வேறுமுகமாக்கூறின் இன்று திகழும் எல்லாவைணவமதங்களும் 1000 அண்டுகளுக்குமுன் நிறுவப்பட்ட இராமாநுச ஸித்தாந்தத்தின் கிளைகள்தான் எனலாம். அவர் ஸமகாலத்திலிருந்த்து போல் இன்றுவரை அவருடைய கோட்பாடுகளுக்கு உயர்ந்த வரவேற்பு உள்ளது குறிப்பிடத்தக்கது

இவ்வாறு உலகளவில் வைணவத்திற்குப்பொலிவூட்டியவரும் பொலிக பொலிக பொலிக என்று முந்தையரும், ஆசார்யர்களில் முதல்வருமான நம்மாழ்வாரே தன்பாசுரம்மூலம் ஸூசிபிக்கவல்ல பெருமைவாய்ந்த நம் இராமானுசருக்கு நாம் எவ்வளவு கைங்கர்யம் செய்தாலும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே என்ற கணக்கில் மிகமிகக்குறைவாக்க்தான் தோன்றும். மேலும் ஆசார்யோத் தமருடைய சீருக்குச்சீர்சேர்க்கும்வகையில் முந்தையருக்கும் பிந்தையருக்கும் கிடைக்கப்பெறாத ஆயிரமாவது வருடவிழா காணும் பேறு நமக்குக்கிடைத்துள்ளது. அரிதிலும் அரிதான இந்தபாக்யத்தைக்கொண்டாட எவ்வளவோ நிகழ்ச்சிகளும் விழாக்களும் எண்ணற்ற அமைப்புக்களால் கொண்டாடப்பெறவுள்ளன. எனினும், வையமே வியக்கும் வண்ணம் பொக்கிஷமான இராமானுசருக்கே பொக்கிஷமாக விளங்கவிருக்கும் ஸமதாமூர்த்தியான இராமானுசரின் மிகப்பெரிய உருவச்சிலை அமைக்க பகவத் பாகவதானுக்ரஹத்தில் நமக்கோர் விதி வாய்க்கின்றது.

## நம் கடமை

ஆண்டுகளாம் ஆயிரம் உருண்ட கொண்டாட்டத்தை திரண்டு மகிழவும் இன்னும் பற்பல்லாயிரமாண்டுகள் நிலைத்திருக்கும்படி ஒரு பிரம்மாண்ட நினைவகத்தை சீரியசிந்தனையுடன் உருவாக்குவது மநம் அனைவருக்கும் கடைமையல்லவா?.

## ஸ்ரீமத்ராமாநுசரின் மூர்த்தி அமையப்போகும் ஸ்தலம்

இந்தக்கடைமையை நிறைவேற்றும்வண்ணம் உதிக்கப்போவது தான் ஹைத்ராபாத் நகரத்துக்கு அண்மையில் ஷம்ஷாபாத் விமான நிலையத்திலிருந்து வெகு அருகாமையில் பலவிசேஷாம்சங்களுடன் கூடி உலகமக்களை தன்பால் திசைதிருப்பும் வகையில் அமையப்போகும் கீர்த்தியைப்பறைசாற்றக்கூடியதான இராமானுசரின் மூர்த்தி.

## இப்பணியின் தற்வபோதையநிலையும் சிறப்பம்சங்களும்

இதற்கான முக்கிய முதற்கட்டப்பணிகள் ஆரம்பித்து நடந்து வருகின்றன. 50 ஏக்கர் நிலப்பரப்பளவு சமன் செய்து சீர்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி மூர்த்தியை வடிவமைக்க சீனாவைச்சேர்ந்த உலகப்புகழ்வாய்ந்த Aerosun என்ற நிறுவனத்திற்கு முறைப்படி ஆர்டர் அனுப்பப்பட்டுள்ளது. உலகெங்கும் பரவி வாழும் வைணவர்களுக்கும் அவர்களின் ஓருங்கிணைப்புக்கும் கௌரவத்திற்கும் பெருமைசேர்க்கும்




ஸ்ரீராமாநுஜ ஸஹஸ்ராப்தி
ஜீவா இடம், ஸ்ரீராமநகரம்
ஷம்ஷாபாத்,
ரம்காரெட்டி மாவட்டம்
பின் 509325
போன்: 95535 49971/72


